
# ஸ்ரீ சரபேஸ்வரர்

## வழிபாட்டு முறைகள்

## மந்திரங்கள் - பரிகாரங்கள் - போற்றிகள்



இலவச வெளியீடு

# ஸ்ரீ சரபேஸ்வரர்

## வழிபாட்டு முறைகள்

## மந்திரங்கள் - பரிகாரங்கள் - போற்றிகள்

இலவச வெளியீடு



கீரிமலை

ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர்

தேவஸ்தானம்




கீரிமலை
ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர்
தேவஸ்தானம்

பூர்வத்வார நூதன அதிசுந்தர
நவதள - நவகலச சகித
சிவமஹா இராஜகோபுர பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக நாளான
07.07.2018
அன்று வெளியிடப்பட்டது.



# திருப்பிரமபுரம் பதிகம்

எரித்த மயிர் வாளரக்கன் வெற்பெடுக்கத்
தோளொடுதாள்
நெரித்தருளுஞ் சிவமூர்த்தி நீறணிந்த
மேனியினான்
உரித்தவரித் தோலுடையான் உறை
பிரமபுரந்தன்னை
தரித்தமனம் எப்போதும் பெறுவார்
தாம் தக்காரே.

**தலம் : திருப்பிரமபுரம்**

**பண் : சீகாமரம்**

**திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்**
**இரண்டாம் திருமுறை**



# ஸ்ரீ சரபேஸ்வரர் வழிபாட்டு முறைகள்,

## மந்திரங்கள், பரிகாரங்கள், ஸ்தோத்திரங்கள்

சிவபெருமானது சங்கார மூர்த்தங்களுள் சரபேஸ்வரர் மூர்த்தியும் ஒன்று. சரபர் என்றும் வழங்கப்படுகிறார். நரசிம்மத்தினை சம்கரித்ததால் சிம்மக்ன மூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறார். சிவனின் வேக வடிவமே சரபர் ஆவார்.



அசுரன் இரணியகசிபு சிவ பெருமானை நோக்கி கடும் தவம் புரிந்தான். சிவனும் காட்சி தந்தருளினார். அப்போது, இரணிய கசிபு, மிருகம், பறவை, மனிதன், தேவர்களாலோ எவ்வித பயங்கர ஆயுதத்தாலோ வீட்டுக்கு உள்ளேயோ வெளியிலோ, பகலிலோ இரவிலோ, மண்ணிலோ, விண்ணிலோ மரணம் நேரக்கூடாது என்ற வரமருளும்படி வேண்டிக் கொண்டான். சிவன் அவ்வரத்தை தந்தருளினார்.

இதனால், அளவற்ற அகந்தை கொண்ட இரணியன் தானே தெய்வம், தன் பெயரையே கூற வேண்டும். இறைவன் பெயரை உச்சரிக்கக்கூடாது என்று தன் நாட்டு மக்களுக்கு ஆணையிட்டான். இரணியனுக்குப் பயந்து, மக்களும் அவ்வாறே செய்தனர்.

இரணியனுக்குப் பிறந்த பிரகலாதன் 5 வயது அடைய கல்வி பயில குருகுலம் சென்றான். ஆசிரியர் இரணியாயநம என்று போதிக்க, பிரகலாதன் நாரா யணாய நம என்று கூறினான். ஆசிரியர் திருத்தியும் பலன் இல்லை.

எனவே, ஆசிரியர் இதை அரசனுக்கு அறிவித் தார். இரணியன் தன் மகன் என்று கூடப் பாராமல் பல தண்டனைகள் செய்தும், அவன் அவற்றினின்று மீண்டான். இரணியன் பிரகலாதா! நீ கூறும் நாரா யணன் இத்தூணில் இருக்கின்றானா? எனக் கேட் டான். தூண் இரண்டாகப் பிளந்தது.

தூணிலிருந்து திருமால், சிங்கத் தலையும், மனித உடலும் கொண்ட நரசிங்கமாய் வந்து, பகலும், இரவும் அற்ற அந்தி வேளையில் வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இல்லாத வீட்டு வாசல்படியில் வைத்து, விண்ணிலும் மண்ணிலும் இன்றி, தன் மடி மீது இரணியனைக் கிடத்தி பயங்கர ஆயுதம் எதுவுமில்லா மல், தனது கூரிய நகங்களாலே அவன் உடலைக் கிழித்துக் கொன்றார். அசுரன் இரத்தத்தை ஏற்றார். இதனால், நரசிம்மர் உக்கிரமாகி உலகத்தை அழிக்க முற்பட்டார்.

இதைக்கண்ட தேவர்கள் பயந்து, நடுங்கி சிவ பெருமானிடம் சென்று காத்தருளும்படி வேண்டினார்

கள். சிவபெருமானும் உக்கிர நரசிம்மரின் வேகத் தைத் தணிக்க வீரபத்திரரை அனுப்பினார். அவரால் முடியாமல் போகவே, சிவபெருமானே சரபேஸ்வர ராகத் தோன்றினார். சிவபெருமானின் 64 மூர்த்தங் களுள் சரபர் 30 ஆவது மூர்த்தம்.

**பக்தி சிங்கவனை மீது படரின்றிருந்த பார்த்திவனை**
**ஏத்திச் சிங்கறைக் கொன்று இறுமாப்பதனால் இரு நிலத்தில்**
**தந்திச் சிங்கனுறத் தேய்த்தறன்னைக் கண்டு சரபமதாய்க்**
**கொத்தி சிங்கன் தன்னை அழித்த கோவே! நினது சரணம் போற்றி!**

என சரப வடிவமெடுத்துத் தமது நரசிம்மத்தினை அழித் தமையே "சிவ பராக்கிரமம்" என்னும் நூல் கூறுகிறது.

## சரபேஸ்வரர் உருவ அமைப்பு

மனித உடலும், யாளி ரூபமும், சரப பறவை வடிவ மும் ஒருங்கே அமைந்த உடல், எட்டுக் கால்கள், மான் மழு அக்னி, அங்குசம் ஏந்திய 4 கைகள், மிருக வால், சந்திரனும் சூரியனும், அக்னியும் மூன்று கண்கள், சிங்கம் போன்ற வாய், கோரைப் பற்கள், தலையில் கிரீடம், பிரத்யங்கரா (அதர்வண காளி) தேவியும் சூலினி (துர்க்கையும்) யும் 2 இறக்கைகள்.

நரசிம்மருக்கும் சரபருக்கும் இடையே உக்கிர மாக சண்டை ஏற்பட்டது. கண்ட பேருண்டம் என்ற பட்சியின் உருவில் நரசிம்மர் யுத்தம் செய்தார். கண்ட பேருண்டம், சரபப் பட்சிக்கு வைரி (விரோதி) ஆகும்.

சரபருக்கு கோபமுண்டானது. அப்போது அவர் நெற்றிக் கண்ணிலிருந்து பிரத்தியங்கரா என்ற அதர் வணப் பத்திரகாளி தோன்றினாள். இவள் கண்ட பேருண்டத்தின் சக்தியை விழுங்கிவிட்டாள்.

உக்கிர நரசிம்மத்தை, ஸ்ரீ சரபேஸ்வரர் தம் மடியில் கிடத்தி தன் இறகுகளால் வீசி, மூச்சுக்காற்றால் குளிர வைத்து, கைகளால் இதமாகத் தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி, இறுதியில் உக்கிர நரசிம்மரே, தன் இரு கைகளையும் தூக்கி, கூட்டித் தொழும் அளவிற்கு பக்குவமாக சாந்தப்படுத்துகிறார். இதற்கு சரபேஸ்வரருக்கு 18 நாட்கள் ஆகிவிட்டன. துன்பந் தீர்ந்து, தேவர்களும், கடவுளர்களும் வணங்கினர்.

சரபர் திருவடிகளில் சரணாகதியாய் நரசிம்மர் வணங்குகிறார். நரசிம்மர் மீண்டும் திருமால் வடிவம் கொள்கிறார்.

சரபேஸ்வரர் வடிவம்தான் பயங்கரமானதே தவிர, அவர் கருணை மிக்கவர். சாந்த சொரூபி. சாந்தப்படுத்தத்தானே அவர் தோன்றினார்.

சரபருக்கு சாளுவேசர் என்ற பெயரும் உண்டு.

மனிதன் + மிருகம் + கோபம் = நரசிம்மர்

மனிதன் + மிருகம் + பறவை + சாந்தம்
= சரபேஸ்வரர்

அதாவது நான்கு மூன்று தன்வசப்படுத்தியது.

நரசிம்மர் அவதாரமும், சரபர் அவதாரமும் பிர தோஷ காலத்திலேயே நிகழ்ந்தது.

## காஞ்சி புராணத்தில் சரபேஸ்வரர்

நன்னாயிரண்டு திருவடியும், நனி நீள்வாலும், முகம் இரண்டும்
கொன்னார் சிறகும் உருத்திரமும் கொகும் பேரார்ப்பும் எதிர்தோற்றி
செந்நீர் பருகி செருக்கு நரமடங்கல் ஆவி செகுத்திரி கொண்டு
முன்னர் குலங்கன் முழுதளிக்கும் உடையான் சரபத்திரு உருவம்

(சிவபுராணம் - பகுதி 12)

## சரபர் வழிபாட்டால் ஏற்படும் பலன்கள்



பகைவர் கொடுமை தீரும், பில்லி சூனிய, பிசாச, பிரேத ஏவல் நீக்கம், நியாய மான வழக்குகளில் நீதி கிடைக்கும். வாஸ்து குற்றங் கள் நீங்கும். சனித் தொல் லை விலகும். திருமணத் தடை நீங்கும். புத்திர பாக் கியம் கிடைக்கும். வியாபா ரம் செழிக்கும். பணம் சேரும்.

வெப்ப வியாதிகள் தீரும். கர்ப்பப்பை, மாதவி டாய்க் கோளாறு நீங்கும். சொத்து பிரிவினைகள் பிரச் சினை, பதவி உயர்வு பிரச்சனை தீரும்.

ஞாயிறு ராகு வேளை வழிபடுவது உத்தமம்.

### சரபேஸ்வரர் காயத்ரி

சாலும் வேசாய வித்மஹே பட்சிராஜாய தீமஹி
தந்நோ சரப ப்சோதாயாத்
அஷ்டபாதாய வித்மகே பட்சிராஜாய தீமஹி
தந்நோ சரபப்ரசோதயாத்.

## ஸ்ரீ சரபரின் ராகுகால வழிபாடு விசேஷம்

நவக்கிரகங்களில் ராகு பாம்பு வடிவுடையவன். ராகு தினமும் மூணே முக்கால் நாழிகை அதாவது 1 மணி 30 நிமிஷம் விஷத்தைக் கக்குகிறான். அந்த நேரத்தில் காரியங்கள் தொடங்குவதோ, செய்வதோ தடைபடும். ஆனால் ராகு ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு காலத்தில் 4.30 முதல் 6.00 மணிக்குள் ஸ்ரீ சரபேஸ்வரரை வழிபடுகிறான். அப்போது ராகு கக்கும் விஷம் இறைவனருளால் அமிர்தமாக வடிகிறது. ராகு சரபரை வழிபடும் இந்த நல்ல நேரத்தில் அமிருத கடிகையில் பக்த கோடிகள் ஸ்ரீ சரபரை வழிபட்டால் ராகு தோஷங்கள் நீங்கி, சகல க்ஷேமங்களும் உண்டாகும் என்பது ஐதீகம்.

## சரபேஸ்வரரக்கு தனிச்சந்நிதி உள்ள கோயில்கள்

1. திருபுவனம் - கம்பரேசுவரர் (நடுக்கம் தீர்த்தநாதர் கோயில்) மூன்றாம் குலோத்துங்க சோழன் கட்டிய சந்நிதி கி.பி 1716 - 1216) சரபரின் கல் வடிவ சிலையும் பஞ்சலோக உற்சவரும் உள்ளன. பங் குனி உத்திர திருவிழா முடிந்த பின்வரும் ஞாயிற் றுக்கிழமையில் சரபருக்கு உற்சவம் நடக்கும். அன்று இரவு உற்சவ சரபர் புறப்பாடு உண்டு. சரபர் புறப்பாடு இங்கு மட்டுமே நடக்கிறது.

கும்பகோணம் / மயிலாடு துறையிலிருந்து சாலை யில் 6 கி.மீ.

2. தாராசுரம் - ஐராவதீஸ்வரர் கோயில். ஞாயிறு தோறும் ராகு வேளையில் சிறப்பு வழிபாடு நடக்கி றது. இரண்டாம் ராஜராஜ சோழ மன்னனால் கட்டப்பட்டது. (கி.பி. 1146 - 1172) கும்பகோணம் / தஞ்சாவூர் சாலையில் 3. கி.மீ.

3. துக்காச்சி : ஆபத்சகாய ஈஸ்வரர் கோயில் விக் கிரம சோழனால் அமைக்கப்பட்டது. (கி.பி. 1118 - 1135) கோயில் பராமரிப்புக் குறைவு. கும்ப கோணம் வழிநாச்சியார் கோயில் / ஏரவாஞ்சேரி சாலையில் துக்காச்சி விலக்கு ஸ்டாப்பில் இறங்கி, 1 கி.மீ. நடக்கவும். நாச்சியார் கோவிலில் ஆட்டோவில் சென்று திரும்புவதே வசதியானது.

4. சிதம்பரம் - நடராஜர் கோயிலில் கொடி மரத்தின் தெற்கே சரபர்.

5. அருப்புக்கோட்டை - அமுதலிங்கேஸ்வரர் கோயி லில் சாந்த சரபேஸ்வரர் - புதுமையான வடிவம். மதுரையிலிருந்து 48 கி.மீ. விருது நகரிலிருந்து 18 கி.மீ

6. சேலம் - (உடையார்பட்டி) ஸ்கந்தாசிரமம்.

7. காரைக்குடி - சிவன் கோயிலில் பஞ்சலோக

வடிவத்தில் சரபர் திருப்பத்தூர் அருகில் சிவ கங்கை மாவட்டம்.

8. காஞ்சிபுரம் - பிள்ளையார் பாளையம் பகுதியில் கன்னி கோயில் அருகில் தனிக்கோயிலில் சரபேஸ்வரர்.

9. தாமல் : பைபாஸ் ரோட்டில் உள்ள சிவன் கோயில் காஞ்சிகுபுரத்துக்கு 12 கி.மீ.

10. கங்கை கொண்ட சோழபுரம் - உடையார் பாளை யத்திலிருந்து 16 கி.மீ பெரம்பலூர் மாவட்டம்.

## சென்னையில் உள்ள சரபர் சந்நிதிகள்

1. மயிலாப்பூர் - கபாலீஸ்வரர் கோயிலுக்கு அருகில் உள்ள வெள்ளீசுவரர் கோயில்.

2. தாம்பரத்தை அடுத்துள்ள ஸ்கந்தாசிரமம், மகா லட்சுமி நகர், சென்னை - 73.

3. குரோம்பேட்டையில் குமரன் குன்றின் மீதுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்.

4. சோழிங்கநல்லூர் - திருவான்மியூர் அருகில் உள் ளது. சரபேஸ்வரர், பிரத்யங்கராதேவி உள்ளனர். கோயில் தூண்களில் சரபர் இவருக்கு வழிபாடு உண்டு.

## சென்னை

1. பூந்தமல்லி - வைத்தீசுவரர் கோயில்.
2. திருவான்மியூர் - மருந்தீஸ்வரர் கோயில்.
3. மாடம் பாக்கத்தில் (தாம்பரம் அருகில்) தேனு புரீசுவரர் கோயில்.
4. கோயம்பேடு - குறுங்காலீசுவரர் கோயில்.
5. யானைக்கவுனி - போஸ்ரோடு சிவசுப்பிரமணிய கோயில்.
6. திரிசூலம் - திரிசூலநாதர் கோயில் திரிசூலம் ரயிலடி அருகில்.
7. திருவொற்றியூர்
8. மயிலாப்பூர் - நவராத்திரி மண்டபம்

## பிற ஊர்கள் தூண்களில் சரபர்

1. மதுரை - மீனாட்சி அம்மன் கோவில் சுமார் 3 அடி உயரமுள்ள சரபர் தினசரி இலவச அன்னதான மண்டபம் நடக்கும் நுழைவு வாயில் (உண்டிய லுக்கு அருகில்)
2. திருவண்ணாமலை - அண்ணாமலையார் கோயில் - நவக்கிரக சந்நிதிக்கு முன்னால்
3. ஆவுடையார் கோயில் - ஆத்மநாதர் கோயில் (அறந்தாங்கி அருகில்)
4. காஞ்சிபுரம் - ஏகாம்பரநாதர் கோயில்.

## சுதைச் சிற்பங்களில் சரபர்

1. திருவாரூர் - கோயிலின் மேலைக் கோபுரம்
2. வைத்தீஸ்வரன் கோயில் - கோயிலின் கிழக்கு கோபுரம்
3. மதுரை - மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம்.

## வெற்றிகளைத் தரும் சரபேஸ்வரர்

தேவைகளும் எதிர்பார்ப்புகளும் பக்தர்களிடம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகின்றன. அமைதி என்பது அனைவரும் இழந்து தவிக்கும் சொத் தாகிப் போய்விட்டது. கலக்கமும், கவலைகளும் பக்தர் களிடம் கலந்து கிடக்கின்றன. தோல்விகள் அடிக்கடி நேரிட்டு தொல்லைகள் கொடுக்கின்றன. பக்தர்களை துவளச் செய்கின்றன. சாந்தி தேடி அலைந்து அலைந்து சலிப்பில் கிடக்கிறார்கள் பலர்.

இவர்களெல்லாம் துன்பங்களிலிருந்து முற்றும் விடுபட முறையான வழி என்ன தெரியுமா? இறை வழிபாடு ஒன்றேயாகும்.

இறைவனை வாயார வாழ்த்தி, நெஞ்சார சிந் தித்து, மெய்யாரக் கும்பிட்டால் கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும். கேட்டால் வாரி வழங்கும் வள் ளல்தான் கடவுள்.

கடவுளுக்குப் பல திருக்கோலங்கள், ஒவ்வொரு கோலத்துக்கும் ஒரு பெருமை. பக்தன் தனக்கு என்ன வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதை யாரிடம் கேட்பது என முடிவெடுக்க வேண்டும்; அந்த தெய்வத்துக்கு எங்கே அதிக சக்தியுடன் கோயில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்; அந்த தெய்வத்துக்கு எங்கே அதிக சக்தியுடன் கோயில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்; அங்கு சென்று கேட்க முடிவெடுக்க வேண்டும்; எப்போது கேட்பது? எப்படி கேட்பது? என்ன பரிகாரம் செய்வது? என்றெல்லாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். உரிய கோரிக்கையை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். உரிய கோரிக்கையை உரிய இடத்தில் சரியான முறைப்படி, சரியான நேரத்தில் இறைவன் முன் வைத்தால் வெற்றி நிச்சயம். இந்த சூட்சுமம் கடவுள் வழிபாட்டுக்குப் பெரிதும் கைகொடுக்கக் கூடி யது. வெற்றி மீது வெற்றி சேர்ப்பது.

பழங்காலத்தில் இந்த நாட்டை ஆண்ட அரசர்கள் இந்த நுட்பத்தை நன்றாக அறிந்திருந்தார்கள். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். மூன்றாம் குலோத்துங்க சோழன் என்ற மன்னனை எடுத்துக் கொள்வோம். அவன் பெரிய வீரன். கொங்கு நாட்டையும், ஈழ நாட்டையும், கருவூரையும் ஜெயித்தவன். பாண்டியன் முடித்தலைக் கொண்டவன். வீரா

பிஷேகம். விஜயாபிஷேகம் என்ற அபிஷேகங்களைச் செய்து கொண்டவன். பெருவீரன், மூன்று உலகங் களுக்கும் அதாவது சேர சோழ பாண்டிய நாடுகளுக்குத் தலைவனாக இருந்ததால் திரிபுவன வீரதேவன் என்று புகழப்பட்டவன்.

இந்த பேரரசன் கும்ப கோணத்துக்கும், திரு விடை மருதூருக்கும் நடுவில் இருக்கும் சிற்றூரான திரிபுவனம் என்ற இடத்தில் இருந்த ஒரு பழைய கோயிலைப் புதுப்பித்தான். திரிபுவன வீரேஸ்வரம் என்பது அந்தக் கோயிலுக்குப் பெயர். அது ஒரு பெரிய கோயில். முழுக்க முழுக்க கருங்கல்லால் கட்டப்பட்ட ஆலயம். இதன் கலையமைப்பு தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், தாரா சுரம் கோயில் என்னும் மூன்று கலைக் கோயில்களை உருவாக்கிய சிற்பிகளின் மரபினரால் ஆக்கப்பட்டது. பாரம்பரியமிக்க கலை நுட்பத்தின் பரிணாம வளர்ச்சி யின் - முதிர்ச்சியின் வெளிப்பாடு இது. பிற்கால சோழர் களின் ஆலயங்களின் மணி மகுடம் என்றுகூட இதைச் சொல்லலாம்.

இந்த ஆலயத்தை ஆராயும்போது குலோத்துங்கர் களின் பெருமைகளுக்கு ஆதாரமாக, அடித்தளமாக அமைந்திருப்பது இந்தக் கோயிலில் உள்ள தெய்வத் திருமேனிகள் மீது அவன் கொண்டிருந்த பக்திதான் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

திரிபுவனம் கோயிலில் உள்ள மூலவரின் பெயர் கம்பசுரேஸ்வரர். கம்பம் என்றால் நடுக்கம், மனக்க வலை என்று பெயர். இவர் ஆதிகாலத்தில் வரகுண பாண்டியன் மனக்கலக்கத்தைத் தீர்த்தவர். இவரை குலோத்துங்கன் வழிபட்டான். போர்முனையில் புரண் டாலும் கூட, வாள் முனைகளில் வாழ்ந்தாலும் கூட சோழனின் மனதில் கவலை என்பது கடுகளவும் தோன்றவில்லை. சலனம் சஞ்சரிக்க வேண்டிய அவன் இதயத்தில் சாந்தி தவழ்ந்தது. அது நிதானத்தைத் தந்தது. நிதானம் நிலையான இடத்தை வரலாற்றில் அவனுக்கு வகுத்துக் கொடுத்தது. சரித்திரத்தில் சாகா இடம் பிடித்தான்; சாதனைகளை படைத்தான். அவன் கவலைகள் அழிய நடுக்கங்கள் நீங்க உதவினார் கம்ப சுரேஸ்வரர். இவற்றுக்காக பக்தர்கள் வழிபட வேண் டிய தெய்வம் திரிபுவன மூலவர் கம்பசுரேஸ்வரர்.

போர் என்றாலே செலவுதானே. கோடி கோடியாக செலவு செய்தும் அந்தச் சோழனிடம் செல்வம் செழித் தது. அவன் நாட்டில் லட்சுமி தாண்டவமாடினாள். அதற் குக் காரணம் அவன் வழிபட்ட கணபதி. அதாவது சக்தி கணபதி எனப்படும் லட்சுமி கணபதி. கணபதி தன் மடியின் மீது தேவியை உட்கார வைத்துக் கொண் டிருப்பார். மகிழ்ச்சியுடன் இருப்பார். இந்த கணபதியை வழிபட்டால் லட்சுமி கடாட்சம் உண்டு என்பது சாக்த தாந்தரவாதிகளும் கானாதிபத்யவாதிகளும் மந்தண மாக (கான்ஃபிடன்ஷியல்) பாதுகாத்து வந்த மந்திர நுட்

பங்களில் ஒன்று. க்ஷேத்திர கணபதிக்கு எதிரில் உள்ள சிற்பங்களில் ஒன்று. க்ஷேத்திர கணபதிக்கு எதிரில் உள்ள சிற்பங்களின் வரிசையில் இருக்கிறார் இவர். குலோத்துங்கன் திருப்பணி நடந்த இடங்களிலெல்லாம் இவர் இருப்பார். இவரை வழிபட்டால் செல்வம் செழிக்கும். வறுமை அகலும்; வளமெல்லாம் பெருகும்.

பொதுவாக கோயில் கருவறை அர்த்த மண்டப மாடத்தில் துர்க்காதேவி இருப்பாள். திரிபுவன கோயிலில் உள்ள மகா மண்டபத்தில் ஒரு விசேஷ துர்க்கை இருக்கிறாள். இவளை ராகு காலத்தில் வழிபட கிரக தோஷங்கள் நீங்கும்; நாக தோஷங்கள் அகலும்; வெற்றிகள் குவியும்.

திரிபுவனம் கோயிலில் மகா மண்டபத்தில் சனீஸ்வரனுக்கு தனிச் சிலை உண்டு. வரகுண பாண்டியனைப் பற்றிய சனி தோஷத்தை நீக்கியவர் இவர். இவரை வழிபட சனி தோஷங்கள் அகலும்.

சோமாஸ்கந்தரை வழிபட்டால் திருமண பாக்கியம் உண்டு. திரிபுவனம், கோயிலில் தனி மண்டபத்தில் சோமாஸ்கந்தர் இருக்கிறார். இவரை வழிபட திருமணத்தடை நீங்கும். நன்மக்கட்பேறு உண்டு.

மன ஊக்கம், செல்வ வளம், வெற்றி மீது வெற்றி இவை எல்லாம் ஒருவரிடம் வந்துவிட்டால் அகந்தை வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். திரிபுவனம் கோயி

லைக் கட்டிய மூன்றாம் குலோத்துங்க சோழனிடம் மேற்கண்ட குணாதிசயங்கள் எல்லாம் ஒட்டிக் கிடந் தன. ஆனாலும் அவன் மனநிலையில் ஆழ்மனதில் அற உணர்வு - தர்மசிந்தனை மேலோங்கிக் கிடந்தது. அகம் பாவம் சிறிதும் இல்லை.

சோழன் தன் குலதெய்வமான தில்லை நடராஜ ருக்கு எல்லையில்லாத பணத்தை செலவழித்து பெரு விழா எடுத்தான். சுவாமி புறப்பாடு செய்தான். மேள தாளங்களுடன் வீதிவுலா, வேதமும், திருமுறையும் முழங்க நடராஜர் உலாவந்து கொண்டிருந்தார்.

பேரரசன் குலோத்துங்கன் சுவாமியை எப்படி தரிசித்தான் தெரியுமா? வி.ஐ.பி.யாக இருந்தா? நிச்சய மாக இல்லை. திருவீதியில் நின்று சேவித்தான். மன்ன னாக இல்லாமல் மக்களோடு தெருவில் நின்று தெய்வத் தை வணங்கினான். இப்படிப்பட்ட தர்ம உணர்வு அவ னிடம் இருந்தது. இந்த உணர்வை அவனுக்குக் கொடுத்தவள் திரிபுவனத்தில் உள்ள அறம் வளர்த்த நாயகி தர்மசம்வர்த்தினி.

இந்த தாய் மன்னனுக்கு மட்டுமல்ல, தன்னை வணங்கும் எல்லா பக்தர்களுக்கும் தர்மசிந்தனையை தந்து கொண்டிருந்தாள்.

இவையெல்லாவற்றுக்கும் சிகரமாக இருப்பது திரி புவனம் கோயிலின் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில்

உள்ள தனிக்கோயில். அங்கே சரபர் இருக்கிறார் சரபர் சன்னதிக்கு பக்கத்தில் அவருக்கு உற்சவ விக்ரகம் இருக்கிறார். தமிழ் நாட்டில் உள்ள சரபர் கோயில்களில் பழமையானது இது. உற்சவரும் பழமையானதே.

நரசிம்மருடைய உக்ரத்தை தணிப்பதற்காக சிவ பெருமான் எடுத்த பைரவ வடிவம் சரபர் என்று சொல் லப்படும். பறவை, சிம்மம், மனித உடல் கலப்புடன் அமையும் திருவுருவம் இது.

சரபர் உடலில் எல்லா தெய்வங்களும் வியாபித்து இருக்கிறார்கள். பில்லி, சூனியம், ஏவல் முதலான தோஷங்கள் நீங்க வழிபாட்டு முறைகள் உண்டு. சின்ன சின்ன ஏவல்களைப் போக்கும் சக்தி தெய்வங் கள் சிலவற்றுக்கு உண்டு. தோஷ நீக்கத்துக்கு துர்க் கையை வழிபடுவார்கள். துர்க்கைகளில் 16 வகைகள் உண்டு. அந்த வகைகளில் அதிக சக்தி வாய்ந்த துர்க் கை சூலினியாகும். ஆகமங்களில் சொல்லப் பட்டுள்ள இந்த துர்க்கை சரபரின் இறக்கையில் இருப்பதாக புரா ணங்கள் சொல்கின்றன.

சமீப காலமாக பிரத்யங்கரா என்ற காளியை வழி படுவது விசேஷமாகி வருகிறது. இந்தக் காளி வழிபாடு வைதீக ரீதியான வழிபாடு. காளி வகைகளில் இவ ளுக்கு சக்தி அதிகம். இவள் சரபரின் இன்னொரு இறக் கையில் இருப்பதாக புராணங்கள் சொல்கின்றன.

சக்தி வாய்ந்த சூலினியும், பிரத்யங்கராவும் சரப ரின் இறக்கையில் அடக்கம். இவர்கள் எல்லாரையும் விட பெரும் சக்தி படைத்தவர் சரபர்.

சரபர் சகல தோஷங்களையும் நீக்குபவர். தீராத வியாதிகளை தீர்ப்பவர். வழக்குகளில் வெற்றி மீது வெற்றி தருபவர். பகைவரை அழிப்பவர். திருமணத் தடைகளை அகற்றுபவர். பில்லி, ஏவல், சூனியம், அபஸ்மாரகம் முதலான எல்லா வகையான தோஷங் களையும் அகற்றுபவர். எதிர்பாராத விபத்துக்களை இல்லாமல் செய்தவர் என்று பட்டியலிடுவது சரபர் கல் பம்.

சரபரை வழிபட ராகுகால நேரங்கள் விசேஷம். சபரரை வழிபட ராகுகால நேரங்கள் விசேஷம். அதி லும் ஞாயிற்றுக்கிழமை ராகு காலம் மிகவும் விசேஷம். திதி நாட்கள் சிறப்பானவை. இந்த எல்லா நாட்களைக் காட்டிலும் விசேஷமான நாள் ஒன்று உண்டு. அது சரப உற்சவ நாளாகும். அன்று சரபர் புறப்பாடும் உண்டு. சரபர் உற்சவ நாளில் சரபருக்கு விசேஷ அபிஷேகங் களும் கோடி அர்ச்சனையும் நடக்கும். பங்குனி உதி ரத்தை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை சரபர் உற்ச வம் நடக்கும்.

தருமை ஆதீனகர்த்தர் அருள் முன்னிலையில் விழா நிறைவடையும். சரபர் உற்சவம் மார்ச் 27ம்

தேதி அன்று நடைபெற உள்ளது.

அன்று காலை விசேஷமான சரப வேள்வி நடை பெறுகிறது. அதன்பின் பெரிய அளவில் அபிஷேக ஆரா தனைகள் நடக்கும். பக்தர்களின் நன்கொடையால் மிகவும் விமரிசையாக நடத்தப்படும். இந்த வேள்வி யிலும், அர்ச்சனையிலும் கலந்து கொண்டால் விசேஷ மான பலன்கள் விளைவது நிச்சயம்.

நினைத்தது நடக்க, கேட்டது கிடைக்க; விதவித மான தெய்வங்கள் குடியிருக்கும் கோயில் திரிபுவனம் திருக்கோயில். தோஷ நீக்கத்துக்கு வழிசெய்வது சரபர் வழிபாடு. வாய்ப்புள்ளசவர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே?

## எப்படி வணங்குவது?

திரிபுவனம் கம்பசுரேஸ்வரர் கோயிலில் வழிபாடு செய்வோர் முதலில் கொடி மரத்து விநாயகரை வணங்க வேண்டும். பின்னர் வாகன மண்டபத்தை கடந்து சென்று மகா மண்டபத்தில் உள்ள விநாயகரை வணங்க வேண்டும். பின் மூலவரைத் தரிசிக்க வேண் டும். அதன் பின்னர் மகா மண்டபத்தில் வரிசையாக இருக்கும் சிலைகளில் துர்க்கை, சனீஸ்வரன், லட்சுமி கணபதி ஆகிய மூர்த்தங்களை வணங்கி ஆலயத்தை வலம் வர வேண்டும். வடகிழக்கு மூலையிலுள்ள சரபரை வணங்கி, பதினோரு முறை வலம் வர வேண்

டும். பின்னர் அம்மனை வணங்கி ஆலயத்துக்கு வெளியே கொடி மரத்தடியில் மட்டும் தான் விழுந்து வணங்க வேண்டும்.

## சகலமும் தரும் சரபர் வழிபாடு

சிவபெருமானின் அருட்கோலங்களில் ஒரு திருக் கோலம் ஸ்ரீ சரபர் ஆவார். எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர்கள் செயல்களை உணவுதான் நிச சயிக்கிறது. மகாவிஷ்ணுவாக இருந்தாலும் நியாயம். நரசிம்மர் அவதாரம் எடுத்து இரணயினின் ரத்தத்தைக் குடித்தார் மகாவிஷ்ணு. குடித்த உதிரம் வேலை செய் தது. எல்லாருக்கும் தொல்லைகள் தரலானார். அந்த நிலையில் சிவபெருமான் சரப பறவை வடிவம் எடுத்து மகாவிஷ்ணுவின் உக்கிரத்தைத் தணித்தார். சாந்தப் படுத்தினார் என்பது சிவமகா புராண செய்தி.

சிங்க முகம், மனித மற்றும் பறவை உடல் கொண்ட கலப்புருவமே சரபர் வடிவம் ஆகும். சரபப் பறவை "பட்சி ராஜா" எனப்படும். இதற்கு 8 கால்கள் உண்டு. இதனைச் "சிம்புட் பறவை" என இலக்கியங் கள் குறிக்கும். சரபரின் இறக்கைகளில் ஒன்றில் சூலினி துர்க்கையும் இன்னொன்றில் பிரத்யங்கரா மாகாளியும் இருப்பதாக ஆகமங்கள் சொல்கின்றன. இவரை வழிபட எல்லா வகையான தோஷங்களும் நீங்கும். சகல நன்மைகளும் கிட்டும் என்பது பூஜா பத்ததி நூல்

களில் சொல்லப்பட்டுள்ள செய்தி.

ஸ்ரீ சரபருக்கு அமைந்துள்ள தொன்மையான ஆலயங்களில் சிறப்பிடம் பெறுவது திரிபுவனம் கம்பசுரேஸ்வரர் கோயில் ஆகும். இந்தக் கோயிலில் சரபருக்கு திருமேனி உண்டு. சரப உற்சவ நாளில் லட்சார்ச்சனை நடக்கும். இரவில் புறப்பாடு.

சரப உற்சவ நாளில் நடைபெறும் லட்சார்ச்சனை யில் பங்கேற்க சகல நலன்களும் கிட்டும். பங்கேற்பவர் களுக்கு சரபர் திருவுருவம் பொறிக்கப்பட்ட வெள்ளிடா லரும் அளிக்கப்படும். அர்ச்சனையில் பங்கேற்று அஞ் சல் வழியில் பிரசாதம் பெற ரூ. 320/= தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : காசாளர், ஸ்ரீ கம்பசுரேஸ்வரர் தேவஸ்தானம், திரிபுவனம், தஞ்சை மாவட்டம் - 612 103. செல் : 9443108752

## ஸ்ரீ சரபேஸ்வரர் வழிபாடு!

புனிதமே உருக்கொண்டதும், பாவங்களை நசிப் பதுமான கங்கையில் நீராடிக் கொண்டிருந்தனர் முனிவர்கள். அவர்களோடு நீராடிக் கொண்டிருந்த மகரிஷி வியாசர், திடீரென்று "கலி சாது கலி சாது" என்றார்.

"ஸ்வாமி கலியுகம் கொடியது என்றுதான் நாங்கள் அறிந்தது. நீங்கள் சிறந்தது என்பது எதனால்?" என்று

வினவினர் மற்ற முனிவர்கள்.

வியாசர் சொன்னார் :

"நீங்கள் சொன்னது உண்மைதான். கலியுகம் மிகவும் அதர்மம் நிரம்பியதுதான். ஆனால், அதற்கு சிறப்பு ஒன்றும் உண்டு" என்ற பீடிகையுடன் தொடர்ந் தார்.

"கிருத யுகத்தில் 10 ஆண்டுகள் முயற்சி செய்து பெறும் புண்ணியத்தை, திரேதா யுகத்தில், ஓர் ஆண் டில் பெறலாம். அதையே துவாபர யுகத்தில் ஒரு மாதத் தில் பெறலாம். ஆனால் கொடியது என்று சொல்லும் கலியுகத்தில், ஒரே நாளில் பெறலாம்.

யோக நிஷ்டை, வேள்விகள், அர்ச்சனை உள் ளிட்ட ஜபதபங்களின் அவசியமின்றி, பகவானின் திரு நாமத்தை உச்சரிக்கின்ற அளவிலேயே அந்தப் பலன் களிகைகூடி விடும். அதனால்தான் கலி சிறந்தது.

மகரிஷி வியாசர், இறையருள் பெற மிகச் சிறப் பான காலம் என்று வர்ணித்த பிறகும் மக்கள் கூட்டம் இன்று பெருந்துயருற்றுக் கிடப்பது ஏன்? கொஞ்சம் யோசித்தால், குறை என்னவென்று புலப்படுகிறது. துவேஷம் பொறாமை, திருப்தியற்ற மனம் - இவை தான் துன்பங்களின் வேரென்று தெளிவாகிறது; ஆம் இரண்யனைப் போல!

நிகரற்ற தவபலம்; இணையற்ற வரபலம்: ஒப்பற்ற செல்வம்; தனக்கு ஈடு சொல்ல எவருமற்ற அதிகாரம்; படைபலம்; புகழ்; மனைவி... இவற்றோடு திருப்தி அடைந்திருந்தால், ஹிரண்ய சம்ஹாரம் நேர்ந்தே இருக்காது.

எது எல்லை மீறினாலும் அழிவுதான் எஞ்சும் என்பதற்கு இவனே உதாரணம் காரணம். அவனுடைய ஆற்றலையும், சிறப்பையும:, வரபலத்தையும் அழிக்க அவனக்குள்ளேயே ஒரு எதிரியும் இருந்தான்.

அதுதான், துவேஷம்!

விஷ்ணுவின் மீதான துவேஷம் அவனுள் கனன்று கொண்டே இருந்ததுதான். "இந்தத் தூணில் இருக்கிறானா?" என்று? எக்காளத்தோடு எழ வைத்தது. அவன் காலத்தையும் முடித்து வைத்தது.

இறையருளால் பெற்ற ஆற்றலை ஒருவன் தவறாகப் பயன்படுத்தினால், அதே இறையருள் அவனை நிர்மூலமாக்கிவிடும் என்று உணர்த்திய சம்பவம் இது!

ஆனால், விஷயம் இதோடு முடியவில்லை.

துவேஷம் என்னும் விஷத்தை தன் ரத்த அணுக்களாகவே கொண்டிருந்த ஹிரண்யனை சம்ஹரித்த நரசிம்மர், மேலும் உக்ரமடைந்தார்.

ஏற்கெனவே, "அண்டங்கீறிச் சிரித்தது செங்கட்

சீயம்" என்று கம்பன் சொன்னது போல, திசை நடுங்க கனல் பொரிய, புகை பறக்கத் தோன்றிய பெருமான், மேலும் சினங்கொண்டால்....?

பிரபஞ்சமே நிலைகுலைந்தது, ஏன்?

துவேஷம் ததும்பிய ஹிரண்யனின் குருதியைப் பருகியதன் விளைவு இது! பகவானுக்கு இது வருமா?

"உண்ணும் உணவின் தன்மையைப் பொறுத்து, உன் சுபாவங்களில் மாற்றம் ஏற்படும்" என்று சாஸ்திரம் சொல்வதை, உணர்த்துவது போன்ற ஒரு நாகம்தான்ஞு அதனால்தான், மேலும் உக்ரமூர்த்தியானார். அந்த உக்ரத்தைத் தணிக்க, ஸ்ரீ சிவபெருமான் மேற்கொண்ட ரூபம் தான் ஸ்ரீ சரபேஸ்வரர்!

ஆவேசம் கொண்ட நரசிம்மரும், அதே ஆவேசம் கொண்ட சரபரும் ஒருவரை ஒருவர் எதிர்கொள்கிறார்கள். அந்தப் போராட்டத்தில் சரபருக்கு துணையாக, உக்ரப் பிரத்யங்கிராவும், சூலினி துர்க்கையும் அமைகிறார்கள். இறுதியில் நரசிம்மர் உக்ரம் தணிந்து சாந்தமாகி, லக்ஷ்மி நரஸிம்மராக காட்சி தருகிறார். இதென்ன வித்தியாசமான கதை என்று தோன்றலாம்.

அடுப்பில் பாலை வைத்துக் காய்ச்சுகிறோம். சிறிது நேரத்தில் பாத்திரத்தில் உள்ள பால் பொங்கி மேலெ எழுகிறது. அப்போது, அதன் மேல் சிறிது நீரைத் தெளிக்கிறோம். உடனே அது அடங்கிவிடுகிறது.

**என்ன காரணம்?**

பாலில் உள்ள நீர்ப்பகுதி குறைந்தவுடன், அது நீரைத் தேடிப் புறப்படுகிறது. அதைப் போன்று கருணையே வடிவான பெருமான், தன்னுடைய காருண்யத்தைத் தேடி ஆவேசித்தார். என்? அவருள், துவெஷம் நிரம்பிய ஹிரண்யனின் குருதி புகுந்தது.

எதிர்ப்பட்ட சரபரின் சக்திக்கு, தெய்வாம்சத்தின் காருண்யமிருந்தது. அந்தக் காருண்யத்தால் தீண்டப்பட்ட மாத்திரத்தில், ஸ்ரீ நரசிம்மரும் தன் சுபாவத்தை எட்டினார்; சாந்தமாகி, சௌம்ய ரூபராக, லக்ஷ்மி நரசிம்மராக காட்சி தந்தார். அப்படி தெய்வ மூர்த்திகளையும் சாந்தப்படுத்தும் திவ்யமூர்த்தியாக, தன்னுடைய பக்தரைப் பிணிக்கும் துன்பங்களை, அழித் தொழிப்பவராக, பகைகளை விரட்டியருள் பவராகத் திகழ்கிறார் ஸ்ரீ சரபேஸ்வரர். வறுமை, தொடரும் தடைகள், எதிர்ப்புக்கள், பகை, ஏவல் உள்ளிட்ட வினைகள், வஞ்சகங்கள் இவை அனைத்தையும் சர்வ நிச்சயமாக நீக்கியருள்பவர் ஸ்ரீ சரபேஸ்வரர். ஸ்ரீ சிவ மந்திரங்களில் மிகச் சிறப்பானது சரப மந்திரம்; சரப காயத்ரி! ஸ்ரீ சரபரை வழிபடுவதன் மூலம் உங்கள் துன்பங்கள னைத்தும் தொலையம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் கவனம் அவசியம்!

உங்கள் பிரார்த்தனையைப் பற்றிய விஷயம் இது.

உங்களுக்கு தடை ஏற்படுத்துபவனையோ, துன்பம் தருபவரையோ நீங்களாக இன்னார் என்று கற்பனை செய்துகொண்டு விடாதீர்கள்.

ஏனென்றால், குற்றமற்ற ஒருவர் மீது, நீங்களாக, தவறாக துவேஷம் கொண்டால், அவர் பாதிக்கப்படுவார்; அதேசமயம், குற்றமற்ற ஒருவர் பாதிக்கப்பட்டதன் விளைவை நீங்களும் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

எனவே, சரப மூர்த்தியிடம் பிரார்த்தனை செய்து கொள்ளும் முன்பு கவனமாயிருங்கள். உங்கள் துன்பம் நீங்க வேண்டும் என்று பிரார்த்தியுங்கள். உங்கள் இல்லத்தில் சுபநிகழ்வுகள், வறுமை நீக்கம், தடை விலகல், தொழில் வெற்றி, வினைகள் மறைதல் இவற்றை விண்ணப்பியுங்கள்.

ஆனால், எந்தத் தனிநபர் மீதும் துவேஷமோ, வெறுப்போ கொண்டு பிரார்த்திக்காதீர்கள். அதுவே, உங்களையும், உங்கள் அடுத்த தலைமுறையையும் தாக்கும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

தொழிலில் ஏற்பட்டுள்ள தடைகள், பணம் பற்றாக்குறை இவைகள் தீர வேண்டுமானால், வெள்ளிக் கிழமையன்று ராகு காலத்தில் (காலை 10.30 - 12.30 மணி) ஸ்ரீ சரபேஸ்வரரை தரிசித்து பூஜியுங்கள். செல்வம் பெருகவும், மாங்கல்யப் பேறு பெறவும், காரி

யங்களில் ஏற்படும் தடைகள் விலகவும் வெள்ளிக் கிழமை வழிபாடு சிலாக்கியமானது.

செவ்வாய்கிழமையன்று ராகு காலத்தில் (மதியம் 3.00 - 4.30 மணி) ஸ்ரீ சாய ருத்திரரை பூஜித்து வழிபடுவதால், வராக் கடன்கள் வசூல் ஆகும்; கழுத் தைப் பிடிக்கும் கடன் தொல்லைகள் தீர்வுக்கு வரும். நிலம், வீடு சம்பந்தமான வழக்குகள், வில்லங்கங்கள் நல்ல தீர்வைப் பெறும்.

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் (மாலை 4.30 - 6.30 மணி) வழிபாடு செய்வதால், குடும்பத்தில் வளம், மன அமைதி, அறிவில் தெளிவு, பிறரால் ஏற்படும் துன்பங்கள் விலக்கம், அபிசார பிரயோகாங் களால் உண்டாகும் கஷ்ட நீக்கம் இவை கைகூடும்.

பொதுவான இந்த வழிபாட்டைத் தவிர, சுவாதி, திருவாதிரை மற்றும் ரோகிணி நட்சத்திர நாட்களிலும், அஷ்டமி திதி அன்றும் ராகு கால நேரத்தில் ஸ்ரீ சர பேஸ்வரரை பூஜிப்பதால் தம்முடைய விருப்பங்கள் கட்டாயம் நிறைவேறும்.

ஆலயங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் வீட்டி லேயே ஸ்ரீ சரபேஸ்வரர் படத்துக்கு முன் ராகு கால நேரத்தில் விளக்கேற்றி வழிபடலாம். நாட்டு சர்க்க ரையை நிவேதனம் செய்யலாம். முடிந்தவர்கள் திரு புவனம் கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம்,

சென்னை தாம்பரத்தை அடுத்த ராஜகீழ்பாக்கத்தில் உள்ள ஓம் ஸ்ரீ கந்தாஸ்ரமம், கோயம்பேடு குறுங் காலீஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட இடங்களில் ஸ்ரீ சரபேஸ்வரரை ராகுகாலத்தில் வழிபட்டு பலன் பெறலாம்.

**ஹிம்காரீ சரபேஸ்வரா; அஷ்ட சரண; பக்ஷீ சதுர்பா**
**ஹீசுபாதா க்ருஷ்ட ந்ருஸிம்ஹ விக்ர ஹதா; காலாக்னி**
**கோடித்யுது; விஸ்வக்ஷோப ந்ருஸிம்ஹ தர்ப்பசமன : பிரும்**
**மேந்திர முக்யைஸ்துத : கங்கா சந்த்ரதா : புரஸ்த சாப :**
**ஸத்யோரி புக்னோஸ்து ந :**

சகல நன்மைகளையும் தரும் இந்த தியான ஸ்லோகத்தை, தினமும் மனமொன்றிச் சொல்வதால் நன்மைகள் பெருகும். குறிப்பாக, மாலை வேளையில் சொல்லி வருவது விசேஷ பலனளிக்கும்.

**ஸாலுவேசாய வித்மஹே பக்ஷிராஜாய தீமஹி**
**தந்நோ சரப : ப்ரசோதாயாத்**

என்பது சரப காயத்ரி.

"அம்புகள் எப்படி குறி தவறாமல் இலக்கைத் தாக்கி பலன் தருகின்றனவோ, அதே பொன்று இந்த காயத்ரி மந்திரஜபமும் பலன் தரும்" என்று சாஸ்திரங் கள் உறுதிபடச் சொல்கின்றன.

இந்த தியான ஸ்லோகத்தையும், காயத்ரீ மந்திரத் தையும் மனமொன்றிச் சொல்லி வாருங்கள். உங்

களை வாட்டும் கவலைகள், வறுமை, தடைகள் உள்ளிட்ட அனைத்தும் பட்டென விலகும். வெற்றியும், புகழும் அரவணைப்புக் காட்டும்.



## சரபேஸ்வரர் போற்றி

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் (மாலை 4.30 - 6) சிவாலயங்களில் உள்ள சரபேஸ்வரர் முன்போ, வீட்டில் திருக்கேற்றியோ இந்த போற்றியை சொன்னால் பயம் விலகும். கவலை நீங்கும், நினைத்த செயல்கள் வெற்றி தரும். வீடு கட்டும் பணி தடையின்றி நடக்கும்.

ஓம் விண்ணவா போற்றி
ஓம் விளக்கு உயர் வீரா போற்றி
ஓம் திண்ணவா போற்றி
ஓம் அணிமாமலர் பறவை அரசே போற்றி
ஓம் ருத்ர அக்னியே போற்றி
ஓம் மந்திரத் துதி தேவே போற்றி
ஓம் மாமலை சக்தியே போற்றி
ஓம் சர்வ வியாபியே போற்றி
ஓம் காலனுக்கும் காலச போற்றி
ஓம் கருத்தில் நிறைந்தவனே போற்றி
ஓம் பிறவிபயம் அறுத்தவனே போற்றி
ஓம் நிரந்தரமானவனே போற்றி
ஓம் வீரபத்திரனே போற்றி
ஓம் வீரபத்திரனே போற்றி
ஓம் ஆயிரம் நாமம் உடையாய் போற்றி
ஓம் மகாதேவா போற்றி

ஓம் நரசிம்மரை குளிரவைத்தவா போற்றி
ஓம் நான்மறை ஆனாய் போற்றி
ஓம் சூலினி உடனுறை தேவா போற்றி
ஓம் அதர்வண காளியை அடைந்தவா போற்றி
ஓம் மந்திரம் ஆள்பவனே போற்றி
ஓம் கம்பத்தில் நிற்பவனே போற்றி
ஓம் கோபக்கனலே போற்றி
ஓம் கூர்நகம் கொண்டவனே போற்றி
ஓம் லிங்கப்பதியே போற்றி
ஓம் ருத்ரதாண்டவா போற்றி
ஓம் சத்திய துணையே போற்றி
ஓம் சாந்தி அருள்பவனே போற்றி
ஓம் சத்திய சாட்சியே போற்றி
ஓம் முத்தொழில் தலைவா போற்றி
ஓம் புவனம் படைத்தாய் போற்றி
ஓம் ஆட்டிப் படைப்பாய் போற்றி
ஓம் அறம் பொருள் இன்பம் அளிப்பாய் போற்றி
ஓம் அம்ருத அரசே போற்றி
ஓம் சித்தர் சிந்தை புகுந்தவனே போற்றி
ஓம் ருத்திர மூர்த்தியே போற்றி
ஓம் காலகாலமாய் இருப்பவனே போற்றி
ஓம் சிந்தாமணியின் ஜீவனே போற்றி
ஓம் பரமாத்மனே போற்றி
ஓம் பரப்பிரம்ம ஜோதியே போற்றி
ஓம் கைலாசாவாசா போற்றி

ஓம் திருபுவனேசா போற்றி
ஓம் நடுக்கம் தீர்ப்பாய் போற்றி
ஓம் நம்பினோர் நலம் அருள்வாய் போற்றி
ஓம் ஏவல் தீர்ப்பாய் போற்றி
ஓம் சூன்யம் அழிப்பாய் போற்றி
ஓம் கொடுமை அழிப்பாய் போற்றி
ஓம் எண்ணியது தீர்ப்பாய் போற்றி
ஓம் திண்ணிய நெஞ்சம் தருவாய் போற்றி
ஓம் திடமாய் காரியம் செய்ய வைப்பாய் போற்றி
ஓம் தீயவர் தொல்லை தீர்ப்பாய் போற்றி
ஓம் திருவருள் தருவாய் போற்றி
ஓம் வழித்துணையே போற்றி
ஓம் எட்டு திசையும் காப்பாய் போற்றி
ஓம் நஞ்சை புஞ்சை காப்பாய் போற்றி
ஓம் நம்பி வருவோர்க்கு அருள்வாய் போற்றி
ஓம் நமசிவாய திருவே போற்றி
ஓம் சிவ சூரியா போற்றி
ஓம் சிவச்சுடரே போற்றி
ஓம் அட்சர காரணனே போற்றி
ஓம் ஆதி சிவனே போற்றி
ஓம் திகம்பரா போற்றி
ஓம் ஆனந்தா போற்றி
ஓம் காலத்தின் வடிவே போற்றி
ஓம் காற்றாய் வருவாய் போற்றி
ஓம் கர்ப்பம் காப்பவனே போற்றி

ஓம் காத்து கருப்பு அழிப்பாய் போற்றி
ஓம் எல்லையில்லா பொருளே போற்றி
ஓம் கல்லாலின் கீழ் அமர்ந்தவனே போற்றி
ஓம் வல்லார் வாழ்த்தும் தேவா போற்றி
ஓம் எல்லாமாய் இருப்பவனே போற்றி
ஓம் மூல குருவே போற்றி
ஓம் தெவிட்டா தேனே போற்றி
ஓம் விளக்கு தீபத்தில் ஒளிர்பவனே போற்றி
ஓம் அமரர் படை தலைவா போற்றி
ஓம் மான் வைத்தாய் போற்றி
ஓம் மழு தூக்கி சிறந்தாய் போற்றி
ஓம் அழைத்ததும் வருவோனே போற்றி
ஓம் சூலினித்தாயின் சுகத்தோனே போற்றி
ஓம் பிரத்யங்கிரா பிராணநாதா போற்றி
ஓம் அம்பலத்தாடும் அரசே போற்றி
ஓம் நகமே ஆயுதமாய் கொண்டாய் போற்றி
ஓம் நலம் தரும் தெய்வமே போற்றி
ஓம் உள்ளத்தில் உறைவாய் போற்றி
ஓம் சிந்தனைக்கினிய செல்வனே போற்றி
ஓம் திருவுக்கும் திருவான தெய்வமே போற்றி
ஓம் யாவையும் யாவரும் ஆனாய் போற்றி
ஓம் வேதம் தொழும் வேங்கையே போற்றி
ஓம் வெற்றியை நாடுவோர் உள்ளமே போற்றி
ஓம் நோய் தீர்க்கும் நெடியாய் போற்றி
ஓம் மூலவர்க்கெல்லாம் மூலவா போற்றி

ஓம் மூவர்க்கு முந்திய முதல்வா போற்றி
ஓம் முற்றும் துறத்தோர்ககும் அருள்வாய் போற்றி
ஓம் முக்திக்கு வழி செய்வாய் போற்றி
ஓம் பயம் தீர்க்கும் பரம்பொருளே போற்றி
ஓம் பக்தர் தன் துயர்நீங்கும் ஒளியே போற்றி
ஓம் முக்தர்கள் ஜீவனே போற்றி
ஓம் முழுவதுமாய் எம்மைக் காப்பாய் போற்றி
ஓம் அடியார்க்கு அடியவா போற்றி
ஓம் அருட்பெருஞ்ஜோதி அண்ணலே போற்றி
ஓம் வெள்ளிக்கு வாழ்வு தந்தாய் போற்றி
ஓம் குருவுக்கு உரு தந்த உயர்ந்தவா போற்றி
ஓம் பூரண சரபேசா போற்றி! போற்றி!

## ஸ்ரீ சரபேஸ்வரர் 108 போற்றிகள்

(முதலில் ஓம் ஐம் என்றும் முடிவில் போற்றி என்றும் சேர்த்து சொல்லவும்)

விண்ணவா
விளங்கு உயர் வீரா திண்ணவா
அணிமாமலர் பறவை அரசே
ருத்ர அக்னியே
மந்திரத் துதி தேவா
சந்தாசிமரம் உறைவோனே
சர்வவியாபியே
சங்கரா
காலகாலனை நடுங்கச்
செய்தவனே

காலமெல்லாம் கருத்தில் நிறைந்தவனே
பிறவி பயம் அறுத்தவனே
நிரந்தரமானவனே
நியாயத் தீர்ப்பு வழங்குபவனே
வீரபத்திரனே
ஆயிரம் நாமம் உடையாய்
மகாதேவா
நரசிம்மரை அடக்கிய அழகா

நான்மறை ஆனாய்
சூலினி உடனுறை தேவா

அதர்வண காளியை அடைந்தவா
மந்திர தந்திரங்களை ஆள்பவனே
கம்பத்தில் சிகண்டி சித்தரால் நிற்பவனே
கோபக் கனலாய் சுடர் விடுபவனே
கூரிய நகங்களைக் கொண்டவனே
திருவாரூரில் கோபுர கதை வடிவினனே
இருபத்தியோரு முக
ருத்திரராட்சம் அணிந்தவனே
மிருகபட்சி உருவத்தாய்
சாந்தி அருள்பவனே
சத்திய சாட்சியே

சத்திய உருவே
ஆக்கல், காத்தல், அழித்தல்
தலைவா
கோயம்பேடு உறைபவனே
அனைத்தையும் ஆட்டிப் படைப்பாய்
அறம்பொருள் இன்பம் அளிப்பாய்
அருப்புக்கோட்டையில் உறைபவனே
சித்தர்கள் சிந்தையில் புகுந்தவனே
ருத்திர மூர்த்தியே

நரசிம்மம் உரித்தாய்
நளிர்த்தோலைப் போர்த்தய்

பூந்தமல்லியில் உறைபவனே
இரு சிம்மத் தலைப் பட்சியே
எட்டுக்கால் பறவையே
பரப்பிரம்ம ஜோதியே
தாராசுரம் அமர்ந்தவனே!
திருபுவனேசா
நடுக்கம் தீர்ப்பாய்
நம்பினோர்க்கு நலம் அருள்வாய்
ஏவல் தீர்ப்பாய்
பில்லி சூன்யம் அழிப்பாய்.

எதிரிகள் கொடுகமை தீர்ப்பாய்
எண்ணியவாறு எமக்கருள்வாய்
திண்ணிய நெஞ்சம் தருவாய்
திடமாய் காரியம் செய்ய வைப்பாய்
தீயவர் தொல்லை தீர்ப்பாய்
திருவருள் தருவாய் சரபேஸ்வரா
வழித்துணையாய் வருவாய்
வலம் சுழித்து எட்டு திசையும் காப்பாய்
வைத்தீஸ்வரன் கோயில் கோபுரசுதை உருவினனே
நம்வி வருவோர்க்கு அருள்வாய்

நமச்சிவாயத் திருவே
சிவசூரியா
சிவ சுடரே
அட்சர காரணனே
ஆதி சிவனே
கால பைரவரே
காஞ்சியில் உறைபவனே
திருவான்மியூரில் உறைபவனே
சிம்மக்ன மூர்த்தியே
காற்றெனக் கடுகி உதவும் தேவா

கர்ப்பப் பையைக் காப்பவனே
காத்து கருப்புகளை அழிப்பவனே
ஓம் எரி ஓம்பலின் அவிசை ஏற்பவனே
கல்லாலின் கீழ் அமர்ந்த தேவா
வல்லார்கள் நால்வரும் தோத்தரித்த தேவா
எல்லாமாய் அல்லதுமாய் இருந்த சரபா
முக்திக்கு வித்தாகும் மூல குருவே
தெவிட்டாத சின்மயச் சுடரே
விரும்பி நல்விளக்கு தீபத்தில் வருபவனே
அமரர் படையுடைத் தலைவா

நீலக் கையில் மான் தூக்கி நின்றானே
சிவந்த மழுவும் தூக்கிச் சிறந்தோனே

எங்கிருந்து அழைத்தாலும் வருவோனே
சூலினித் தாயின் சுகத்தோனே
ப்ரத்யங்கிரா தேவியின் பரப்ரும்மமே
செம்பொன் அல்பலத்திலே ஆடும் அரசே
நகமே ஆயுதமாய்க் கொண்ட நமசிவாயயே
பெருமாளுக்கும் நான்முகனுக்கும் நலம்தரும் தெய்வமே
உள்ளவார் உள்ளத்தில் உறைவாய்
சிந்தனைக்கினிய செல்வனே

திருவுருக்கும் திருவான சிவனே
யாவையும் யாவரும் ஆனாய்
வேதமெல்லாம் தொழும் தெய்வமே
வாழி வாழி சாலுவேசா வாழி
நோய்கள் தீர்க்கும் நெடியாய்
மூலவர்க்கெல்லாம் மூலவா
பிரத்தியங்கிரா ப்ராணநாதா
சூலினியின் சூட்சும தேவா
கவஷ ஜலூஷா குருதேவா
இதூஷா மாதா புத்ர சேவித தேவா

மூவர்க்கும் ஜீவ ஒளியே
முக்தர்கள் எம்மைக் காப்பாய்
அடியார்க்கு அருளும் அடியாராய் இருக்கும்

ஈசனே

அங்கமெல்லாம் அருட்ஜோதி

அருட்கூட்டும் சுயஞ்ஜோதியே

வெள்ளிக்கு மரணமிலா வழி தந்த விடிவு ஜோதியே

(வெள்ளி ஸ்ரீ சுக்கிரன்)

குருவுக்கு உரு தந்த உயர் ஜோதியே

காளி துர்க்கா சமேத பூரண

சரபேசா போற்றி!

போற்றி! போற்றி!!! (108)


கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்

எவகிறீன் அச்சகம் 021 221 9893